**கெஸ்பாவ நகர சபை – 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெஸ்பாவ நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள கெஸ்பாவ நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை ஆலோசனையின் படி 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்கு சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் சபையினால் 2021 ஆம் ஆண்டிலும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்கு சொந்தமான காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களுக்காக மீள் மதிப்பீட்டை மேற்கொண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் சபைக்கு சொந்தமான ஏனைய நிலையான சொத்துக்களுக்காக மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றுக்குரிய பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 158,107 அதிகரித்தும், ரூபா 352,463 குறைத்தும் காண்பிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2022 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படுமென அறியத்தருகின்றோம். | வேறுபாடுகளை இனங்கண்டு கணக்கு மீதிகளை சரிசெய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 49,134,973 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 222,180,148 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதனவரி | | |
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனவரியை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 70,123,464 ஆக இருந்ததுடன் ரூபா 50,000 இனை விஞ்சிய ஆதனவரி அலகுகள் 54 இல் இருந்து அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 5,895,415 ஆகும். | 2022.01.01 இல் உள்ளவாறு மொத்த ஆதனவரி மீதியில் ரூபா 50,000 இனை விஞ்சிய ஆதனவரி அலகுகள் 54 இற்கான நிலுவை ரூபா 7,428,663 ஆக இருந்ததுடன் தற்போது அதில் 10 ஆதனங்களுக்குரிய ரூபா 1,533,248 செலுத்தப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கழிவுப்பொருள் வரி | | |
| 2021 ஆம் ஆண்டிற்காக கழிவுப்பொருட்களை | 2021 ஆம் ஆண்டின் எந்தவொரு வரித் தொகையும் | நிலுவைக் கழிவுப் பொருள் வரி |

| | | |
|---|---|---|
| அகற்றுவதற்காக எந்தவொரு தொகையும் செலுத்தாத நிறுவனங்கள் 24 காணப்பட்டதுடன் அந்த நிறுவனங்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 1,490,325 ஆகும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த கழிவுப் பொருள் வரி பெறுமதி ரூபா 3,086,851 ஆகும். | செலுத்தாத நிறுவனம் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றது. உலகம் முழுவதிலும் பரவிச் சென்ற தொற்றுநோய் நிலைமையின் காரணமாக வியாபார நிறுவனங்கள், தற்காலிகமாக வியாபார நடவடிக்கைகளை கைவிட்டமை மற்றும் மூடியமை இதற்கான காரணமாக இருந்தது. | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய போகுந்தர அரசாங்கத்தின் வீடுகளில் வாடகை அடிப்படையில் நீண்டகாலம் முதல் குடியிருக்கின்ற 17 வாடகை வீட்டாளர்களுக்கு காணி உரித்துறுதி வழங்குதல் தொடர்பான முன்மொழிவு 2010 பெப்ரவரி 23 ஆந் திகதி பொதுச் சபையின் ஏகமனதாக சபை அங்கீகரித்திருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் காணியை பகிர்ந்தளித்தல் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்து உரித்துறுதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 36 ‘‘உ’’ உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் காணியை அகற்றும் போது தேவையான குடியிருப்பாளர் களிடமிருந்து அறவிடப்படுகின்ற பெறுமதிகள் பொதுச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்திற்காக 2021.10.29 ஆந் திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2021.12.09 ஆந் திகதிய கடிதத்தின் எங்களால் அனுப்பப்பட்ட ஆவணங்களில் குறைபாடுகள் யாவும் சரி செய்து மீண்டும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிரச்சினைகளை தீர்த்து உரித்துறுதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பிரதான அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 170,000,000 தொகையில் ரூபா 10,000,000 கிடைத்திருந்த போதிலும் ரூபா 160,000,000 தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் | கெஸ்பாவ பிரதான அலுவலக கட்டிடத்தை நிர்மாணிக்கும் முதலாவது கட்டத்திற்காக ரூபா 160 மில்லியன் தொகையும் இரண்டாவது கட்டத்திற்காக ரூபா 200 மில்லியன் தொகையும் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கோரப்பட்டிருந்ததுடன் அந்த விண்ணப்பம் உள்ளூராட்சி | கிடைக்க வேண்டிய பணத்தை தாமதமின்றி பெற்று நிர்மாணங்களை துரிதப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருக்கவில்லை. | ஆணையாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், பிரதம செயலாளர், கௌரவ ஆளுனருக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அந்த கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | |
| (இ) | 2007 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 169,203 முற்பணத் தொகையை தீர்த்து வைப்பதற்கு சபை தவறியிருந்தது. | ஒப்பந்தத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் தீர்க்கப்பட வேண்டிய முற்பணமான ரூபா 169,203 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. 12 வருடங்களுக்கு மேற்பட்ட இந்த கோவையை கண்டறிய முடியாதிருந்தது. 2019.12.12 ஆந் திகதிய பொதுச் சபையின் 5:4 முன்மொழிவின் கீழ் இந்த பணம் அறவிட முடியாத தொகையாக கருதி சீராக்குவதற்கு பொதுச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இது உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பரிந்துரைக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் பரிந்துரை சமர்ப்பிக்காதிருந்ததுடன் அதற்குரிய மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

## 3.2 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் வேறுபிரிக்கப்பட்ட 7179 மெற்றிக் தொன் கழிவுகள் மற்றும் கலப்பு கழிவுகள் 10474 தொன் கரதியான கழிவுப்பொருள் தளத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மொத்த கழிவுப்பொருள் அளவில் வேறுபிரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களின் அளவு 42 சதவீதமாக இருந்தது. மேலும் 2021 ஆம் ஆண்டிற்குரிய வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளுக்காக ரூபா 2,605,700 தொகை தரம் பிரிக்கப்படாத கழிவுகளுக்காக ரூபா 11,443,550 தொகையும் சபை செலவிட்டிருந்தது. வேறு பிரிக்கப்படாத கலப்பு கழிவுப் பொருட்களின் அளவு வேறுபிரிக்கப்பட்டிருக்குமாயின் செலுத்துவதற்கு ஏற்பட்ட ரூபா 3,766,500 தொகைக்கு அண்ணளவான தொகையாக | கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளானமை, அவர்களுடன் தொடர்புடையவர்களாக இருந்தமையால் கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கு வருகை தராமை, நாட்டில் சிக்கலான நிலைமையின் காரணமாக வேறு பிரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டமான "கழிவுப் பொருள் சந்தை" வீழ்ச்சியடைந்தமை சபைக்கு சொந்தமான பழைய வாகனங்கள் நிரந்தரமாக உடைந்திருந்தமை, வாகன உதிரிப்பாகங்களின் பற்றாக்குறையின் அடிப்படையில் வாகனங்களை பராமரித்தலும் | கழிவுப் பொருட்களை உரிய பிரகாரம் வகைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| இருந்ததுடன் அது கழிவுப் பொருள் வேறுபிரிக்காமையின் காரணமாக ரூபா 7,677,050 தொகை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தாமதமடைந்தமை, கழிவுப் பொருட்களை வேறுபிரித்து சேகரிப்பதற்கு பாதிப்பு ஏற்பட்டமை போன்ற காரணங்களினால் கலப்பு கழிவுப் பொருள் அளவு வேறுபிரிக்கப்பட்ட கழிவுப்பொருள் அளவினை விட ஒப்பீட்டு ரீதியில் அதிகரித்திருந்தது. |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆவணங்களுக்கு கொண்டு வரப்பட்ட 32 பரிவர்த்தனை கோபுரங்களின் 10 இன் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் மதிப்பீட்டு பெறுமதியுடன் 29 கோபுரங்கள் கணக்காய்வுத் திகதி வரையிலும் ரூபா 647,466 வருமானமொன்றை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட 32 பரிவர்த்தனை கோபுரங்களிலிருந்து 2021.12.31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 768,909 தொகையில் தற்போது வரையில் 03 பரிவர்த்தனை கோபுரங்களிலிருந்து ரூபா 121,443 தொகை அறவிடப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுக்கு மேலதிகமாக சபையின் செயற்திட்டம் மற்றும் தேவைகளுக்காக சேர்க்கப்பட்ட 46 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டிற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 13,132,057 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | கெஸ்பாவ நகர சேவையின் சேவை தேவையின் பிரகாரம் செயற்திட்ட ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்த்தல் வேண்டும். |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| 05 உத்தியோகத்தர் களிடமிருந்து 2011 முதல் 2016 வரையான காலத்தில் அறவிட வேண்டிய ரூபா 275,973 கடன் மீதியில் | ஊழியர் கடன் மீதியை செலுத்தி பூர்த்தி செய்வதற்கு முன்னர் சேவையை விட்டுச் சென்ற மற்றும் | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மரணமடைந்த மூன்று ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 182,360 தொகை தொடர்பாக ஓய்வூதிய திணைக்களத்திற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது உரிய ஆவணங்களை கண்டறிய முடியாதிருந்தது. அவ்வாறே தங்கியிருப்பவர்கள் தொடர்பான தகவல்களும் காணப்படாமை, ஆளனிக் கோவையில் குறிப்பிடப்பட்ட முகவரியில் எந்தவொருவரும் இல்லாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் மரண பணிக்கொடையில் விண்ணப்ப பத்திரங்களை சமர்ப்பிப்பதற்கும் முடியாதிருந்தது. இரண்டு ஊழியர்கள் சேவையை விட்டுச் சென்றிருந்ததுடன் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். |